## பிரிவு 2 - வயது 8 முதல் 10 வரை

<u>பாடல் 1</u>

**தலம்: பொது** **திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது**
**பண்: காந்தார பஞ்சமம்** **தாளம்: ஆதி**

துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்ச வுதைத்தன அஞ்செழுத்துமே. 3.22.1

**பாடலின் பொருள்:**

தூங்கும்பொழுதும், விழித்திருக்கும் பொழுதும், மனம் கசிந்து உருக நாள்தோறும் திருஐந்தெழுத்தை நினைத்துப் போற்றுங்கள். பல வழிகளில் திரியும் மனத்தைத் தடுத்து ஒருமுகப்படுத்தி இறைவனையே நினைத்து அவன் திருவடிகளை வாழ்த்திப் போற்றிய மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த கூற்றுவனைத் திருவைந்தெழுத்தே உதைத்து அழித்தன.

<u>பாடல் 2</u>

**தலம்: திருக்கச்சியேகம்பம்** **திருநாவுக்கரசு நாயனார் அருளியது**
**பண்: காந்தாரம்** **தாளம்: செம்பை**

கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே. 4.7.1

**பாடலின் பொருள்:**

உண்மை இல்லாத வழிபாடு செய்பவர் இறைவனை அறிய மாட்டார். உண்மை வழிபாடு செய்யும் அடியவர் உள்ளத்தில் கலந்து இருக்கும் பெருமானாய், காளையின் மீது ஏறி வரும் திறனுடையவனாய், பாம்புகள் படமெடுத்து ஆடவும் சடை தொங்கவும், உள்ளங்கையில் தீயினை ஏந்தி இரவினில் கூத்தாடும் பெருமானை என் மனத்தில் நிலையாக வைத்துக் கொண்டேன்.

பாடல் 3

**தலம்: திருவன்பார்த்தான் பனங்காட்டூர்** **நம்பிஆரூரர் அருளியது**
**பண்: சீகாமரம்** **தாளம்: திருபுடை**

விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையில்அன் புடையானை யாவர்க்கும் அறிவொண்ணா
மடையில்வா ளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கை தரித்தானைச் சாராதார் சார்வென்னே. 7.86.1

**பாடலின் பொருள்:**

இடபத்தின்மேல் ஏறி வருபவனும், வேதத்தின் பொருளாய் உள்ளவனும், தன்னை அடைந்தவரிடம் அன்பு உடையானும் ஆகிய, நீர் மடைகளில் வாளை மீன்கள் துள்ளுகின்ற திருவன்பார்த்தான் பனங்காட்டூரில் எழுந்தருளியிருக்கின்ற, யாவராலும் அறியவொண்ணாத, சடைமுடி யின்கண் கங்கையைத் தாங்கியுள்ள பெருமானே எல்லா உயிர்களுக்கும் புகலிடம் ஆவான்.

பாடல் 4

**திருவாசகம் - திருப்பொற்சுண்ணம்** **திருவாதவூரடிகள் அருளியது**
**பண்: ஆனந்தபைரவி** **தாளம்: மும்மைநடை**

முத்துநல் தாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடம் தூபம்நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்டு இசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 8.9.1

**பாடலின் பொருள்:**

தோழியர்களே! முத்து மாலையையும், பூமாலையையும் தொங்கவிட்டு முளைப் பாலிகையையும், குங்குலியத் தூபத்தையும் நல்ல விளக்கையும் வையுங்கள். உருத்திராணியும், ஞான வடிவாகிய திருமகளும், நிலமகளும் கலை மகளோடு கூடித் திருப்பல்லாண்டு பாடுங்கள். சத்தியும், கௌமாரியும், மகேசுவரியும், கங்காதேவியும், முன்வந்து வெண் சாமரை வீசுங்கள். எமது தந்தையும் திருவையாற்றை உடையவனுமாகிய எம் தலைவன் அணிதற்கு பொன் போலும் வாசனைப்பொடியை நாம் இடிப்போம்.